அக்டோபர் 2024
மலர் 23, இதழ் 1

# சத்திய வார்த்தை

IBT நிறுவனர் (Late) Rev. Prof. S. பன்னீர் செல்வம்

**SATHTHIYA VAARTHAI - TAMIL**
இந்திய வேதாகம மொழிபெயர்ப்பாளர்களின் செய்தி மலர்

ஆண்டு சந்தா
ரூ. 100/-

# கர்த்தர் மனிதனிடம் எதிர்பார்க்கும் மூன்று நற்குணங்கள்



# கர்த்தர் மனிதனிடம் எதிர்பார்க்கும் மூன்று நற்குணங்கள்.

*''தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவ சாயலாகவே சிருஷ்டித்தார்...'' (ஆதி. 1 : 27).*

***"God created man in His own image in the image of God created him..." (Genesis 1 : 27).***

மனிதன் ஆண்டு கொள்வதற்கு வேண்டிய சகல தேவைகளையும் படைத்து ஆறாம் நாளில் மனிதனைப் படைத்து ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார். தேவன் ஓய்ந்திருந்த நாளானது மனிதர்களாகிய நமக்கு அது ஓய்வு நாளாயிற்று. மனிதர்களாகிய நம் மீது அளவுக்கு அதிகமான பாசமும், அன்பும் வைத்திருந்தபடியினால் தாம் எப்படியோ அப்படியே அவரது சாயலாகப் படைத்தார். நம்முடைய மீட்புக்காகவும், இரட்சிப்புக்காகவும் பிதா தம்முடைய ஒரே மகனான இயேசுவை பாலகனாக அனுப்பி, நம்மீது கொண்டிருந்த அன்பின் விளைவாக, கொல்கொதா மேடு வரைக்கும் சென்று கல்வாரியில் நம்மை மீட்டெடுத்தார். கடைசி சொட்டு இரத்தம் வரைக்கும் சிந்தி நமக்காக பாடுபட்ட தேவன், நம்மிடம் சில குணநலன்களை எதிர்பார்க்கிறார். அற்புதங்களின் தேவன், அதிசயங்களின் தேவன், வல்லமையின் தேவன் நம்மிடம் எதிர்பார்ப்பது / விரும்புவது மூன்று குணநலன்கள்.

1. கர்த்தருக்கு பயப்படுதல் (The Fear of the Lord)
2. இல்லாதவர்களுக்கு உதவுதல் (To Help Others)
3. தாழ்மையான வாழ்க்கை (Humbleness)

மேலே எழுதியுள்ள மூன்று காரியங்களும் கடினமான காரியமே அல்ல. நம் ஒவ்வொரு–வருடைய வாழ்க்கையிலும் தேவன் இடைபட வேண்டும் என்று எண்ணி வாழ்வோமானால், எல்லாவிதமான நற்குணங்களும் நம்மிடம் வெளிப்படும். அப்படிப்பட்ட வாழ்க்கையை நாம் வாழ்வோமானால், தேவன் எவ்வளவு சந்தோஷப்படுவார். கர்த்தருடைய நாமம் மகிமைப்படும். உலகப்பிரகாரமான விருந்துக்கும், கர்த்தர் நமக்குத்தரும் திருவிருந்துக்கும் ஏகப்பட்ட வித்தியாசம் இருப்பதுபோல, மற்ற மனிதர்களுக்கும், நல்ல பொக்கிஷமான நல்ல குணநலன்களைப் பிரதிபலிக்கும் கர்த்தருடைய பிள்ளைகளுக்கும் ஏகப்பட்ட இடைவெளி உண்டு. அதனை நன்கு உணர்ந்து தேவன் விரும்பும் நற்குணசாலிகளாக இருப்போமாக!

## *1. கர்த்தருக்குப் பயப்படுதல்*<br>(The Fear of the Lord)

*''கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்...'' சங். 111 : 10. ''...தேவனுக்குப் பயந்து அவர் கற்பனைகளைக் கைக்கொள்...'' பிரசங்கி 12 : 13.*

நம்முடைய எண்ணம், பார்வை, பேசும் வார்த்தை, செயல்கள் எல்லாம் சரியாக இருக்க வேண்டுமானால் முதலில் நாம் தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொண்டால்தான் ஞானத்தின் முதல்படியைக் காண முடியும். தேவனின் வாக்குத்தத்தத்தின் மகனான சாலொமோன் அரியணைக்கு வந்தவுடன் தேவனுடைய ஜனங்களைக் காண்கிறார். “எண்ணிக்கைக்கு அடங்காததும், இலக்கத்திற்கு உட்படாததுமான திரளான உம்முடைய ஜனத்தின் *நடுவில் அடியேன்* இருக்கிறேன்,'' என்று தன்னை வெகுவாகத் தாழ்த்தி, உண்மை நிலையை எடுத்துக் கூறுகிறார். தனக்கு முன்னால் உள்ள பணி மிகப் பெரியது என்று அறிக்கையிடுகிறார். தனக்காகவோ, தன் சுய இன்பத்திற்காகவோ எதுவும் கேட்கவில்லை. தன் வேலையை பொறுப்பேற்றுக் கொள்ளுமாறும் கேட்கவில்லை. கர்த்தர் தந்த மாபெரும் பணியைச் செய்வதற்கு ஞானம் தேவை என்று உணர்ந்து ஞானமுள்ள இருதயத்தைக் கேட்டார்.

### *ஞானம் வேறு, அறிவு வேறு :*

ஞானம் கர்த்தரால் கொடுக்கப்படுவது. அறிவு என்பது நம்முடைய சுயபெலத்தால் படிப்பால் பெறுவது. *''முத்துக்களைப் பார்க்கிலும் ஞானமே நல்லது...'' (நீதி 8 : 11).* முத்துகளைக் கடையில் வாங்கலாம். ஞானத்தை கர்த்தரிடம் மட்டும்தான் பெற முடியும்.

அதற்கு முதல்படி கர்த்தருக்குப் பயப்பட வேண்டும். இதன் மூலமாக ஞானம் (Wisdom), அறிவு (Knowledge) ஆகியவற்றை பெறமுடியும்.

சாலொமோன் ராஜா கர்த்தருக்குப் பயந்து நடந்தபடியால் *பூமியின் சகல ராஜாக்களைப் பார்க்கிலும் ராஜாவாகிய சாலொமோன் ஐசுவரியத்திலும், ஞானத்திலும் சிறந்தவனாயிருந்தான் (1 இராஜா 10 : 23, 24).* தேவன் அருளின ஞானத்தைக் கேட்கிறதற்காக சகல தேசத்தாரும் அவன் முக தரிசனத்தைத் தேடினார்கள்.

இப்பேர்ப்பட்ட இஸ்ரவேல் தேசத்தை தன் தகப்பனாகிய தாவீது ராஜா நாற்பது வருடங்களாக (40 years) கர்த்தரின் ஜனங்களை நியாயம் விசாரித்தான். தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட சவுல் ராஜா (The first king of Israel was elected by God) நாற்பது வருடங்களாக (40 years) நியாயம் விசாரித்தான்.

சாலொமோனை கர்த்தர் அதிகமாய் நேசித்தார். *கர்த்தரால் விரும்பப்படுகிறவன்* என்னும் அர்த்தம் கொண்ட *யெதிதியா* என்னும் பெயரை சாலொமோனுக்குக் கொடுத்தார். கர்த்தர் தந்த ஞானத்தினால் அவரும் தன் தகப்பனைப் போல் நாற்பது வருடங்கள் (40 years) ஜனங்களை நியாயம் விசாரித்தார். ஞானத்தை தேவனிடமிருந்து பெற்று அரசாட்சி செய்ததால் ஞானி என்று பெயர் பெற்றார். அந்த ஞானத்தால் நீதிமொழிகள், பிரசங்கி, உன்னதப்பாட்டு என்னும் மூன்று நூல்களை நமக்காக எழுதி, வேதாகமத்தில் தன் பெயரை முத்திரை பதித்தார்.

*<u>மூன்றாவது முற்பிதாவின் மகன் யோசேப்பு:</u>*

*''தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்வது எப்படி?'' (ஆதி 39 : 9).*

கர்த்தருக்குப் பயந்து வாழ்ந்தால் நம் ஜீவியத்தின் ஓட்டம் எப்படி இருக்கும் என்பதற்கு யோசேப்பின் வாழ்க்கை ஒரு மிகப்பெரிய அடையாளம்/எடுத்துக்காட்டு.

யோசேப்பு கண்ட *இரண்டு சொப்பனத்தைக்* கேட்ட பத்து அண்ணன்மார்களும் அவனை வெறுத்தனர். *அண்ணன்மார்கள் வைத்தப் பெயர் சொப்பனக்காரன் (ஆதி. 37 : 19). பார்வோன் வைத்தப் பெயர் சாப்நாத் பன்னேயா (ஆதி. 41 : 45) யாக்கோபு வைத்த பெயர் கனி தரும் செடி (ஆதி 49 : 22) ராகேல் (தாய்) வைத்தப் பெயர் யோசேப்பு (ஆதி. 30 : 24).* யோசேப்பு என்றால் பெருகச் செய்கிறவர் என்று அர்த்தம்.

இப்பேர்ப்பட்ட பெயர்களைக் கொண்ட யோசேப்பின் ஜீவியம் மகிழ்ச்சியாய் கடந்ததா என்று பார்த்தால் இல்லவே இல்லை. அண்ணன்மார்கள் எல்லோரும் சேர்ந்து மீதியானியரும், இஸ்மவேலரும் சேர்ந்த வியாபாரிகள் கூட்டத்தில் இருந்த இஸ்மவேலரிடம் யோசேப்பை 20 வெள்ளிக்காசுக்கு விற்றுப் போட்டடர்கள். யோசேப்பு எகிப்துக்குக் கொண்டு போகப்பட்டான். எத்தனை நாட்கள் நடந்து சென்றானோ தெரியவில்லை.

*<u>யார் அந்த போத்திபார்?</u>*

எகிப்துக்கு கொண்டு செல்லப்பட்ட யோசேப்பை பார்வோனுடைய பிரதானியும் (பிரதம மந்திரி) தலையாரிகளுக்கு அதிபதியுமான போத்திபார் என்னும் எகிப்தியன் இஸ்மவேலரிடத்திலிருந்து யோசேப்பை வாங்கினான். கர்த்தர் யோசேப்போடு இருக்கிறாரென்று போத்திபார் கண்டு, அவனைத் தனக்கு ஊழியக்காரனும், தன் வீட்டிற்கு விசாரணைக்காரனுமாக்கி, தனக்கு உண்டானதை–யெல்லாம் யோசேப்பின் கையில் ஒப்புக் கொடுத்தான்.

*போத்திபாரின் மனைவியைக்* குறித்து வேதாகமத்தில் பார்த்தோமானால், பார்வோனுக்கு

அடுத்த ஸ்தானத்தில் உள்ள பெரிய அதிகாரியின் மனைவி எப்படிப்பட்டவளாயிருந்தாள்? போத்திபார் வீட்டில் இல்லாத சமயத்தில் யோசேப்பை தவறான ஜீவியத்திற்கு அழைக்கிறாள். கர்த்தர் யோசேப்போடே இருந்தபடியால் யோசேப்பு அவளுடைய தவறான காரியத்திற்கு உடன்படாமல் விலகிச் சென்று விடுகிறான். யோசேப்பு போத்திபார் மனைவியிடம் என்ன சொன்னான்?

*''இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு, தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்வது எப்படி, என்றான்'' (ஆதி. 39 : 9).*

தன் மனைவியின் சொல்லை மட்டுமே கேட்டானே அன்றி, யோசேப்பிடம் எதுவுமே போத்திபார் கேட்கவில்லை. தன் அடிமையான யோசேப்பைக் கொல்லுவதற்குக் கூட போத்திபாருக்கு உரிமை உண்டு. ஆனால் அப்படிப்பட்ட காரியத்தைச் செய்யாமல் இருந்ததைப் பார்த்தால், போத்திபாரிடம் சில நற்குணங்கள் இருந்தன. யோசேப்பின் மூலம், தான் ஆசீர்வதிக்கப்பட்டதை மனதில் வைத்து போத்திபார் இரக்கம் காட்டி, யோசேப்பை சிறைச்சாலையில் அடைக்கிறான்.

வாலிப வயதில் இதுமாதிரி சோதனை வந்தால், ஒரு வாலிபன் என்ன செய்வான்? தன்னை, தேவன் காண்கிறார் என்ற பயத்தோடு விலகிச் சென்று விடவேண்டும். தன் உடல் இன்பத்தை விட, தேவனைப் பிரியப்படுத்துவது யோசேப்புக்கு முக்கியமானதாகத் தோன்றியது. எனக்கு விரோதமாக, என் எஜமானுக்கு விரோதமாக என்று யோசேப்பு சொல்லவில்லை. என் தேவனுக்கு விரோதமாக நான் பாவம் செய்வது எப்படி? என்றார்.

அப்போஸ்தலனாகிய பவுல், 2 தீமோ 2 : 22-இல் இவ்வாறாக எழுதுகிறார். *''...பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடி, சுத்த இருதயத்தோடே கர்த்தரைத் தொழுது கொள்ளுகிறவர்களுடனே, நீதியையும், விசுவாசத்தையும், அன்பையும், சமாதானத்தையும் அடையும்படி நாடு''.*

அனுதினமும் மயக்கும் சோதனையை யோசேப்பு தேவ பிரசன்னத்தில் வெற்றி கொண்டார். எந்த ஒரு தவறும் செய்யாத தன்னை, சிறையில் போத்திபார் அடைத்த போது, கர்த்தர் மீது கோபம் கொள்ளாமல், தன் வாழ்க்கை முழுவதையும் அவருடைய மகிமைக்கென்றே அர்ப்பணித்தார் யோசேப்பு. சிறைச்சாலையிலும் கர்த்தர் யோசேப்போடே இருந்தார்.

*<u>சிறைச்சாலையில் யோசேப்பின் அனுபவம்:</u>*

பார்வோனுடைய பிரதானிகளை நோக்கி, "உங்கள் முகங்கள் இன்று துக்கமாயிருக்கிறது என்னவென்று," யோசேப்பு கேட்டான்.

சிறைச்சாலைக்குள்ளே ஒரு நண்பனையும், சிறைச்சாலை அதிகாரி மூலமாக பொறுப்புகளையும் யோசேப்புக்கு தேவன் தந்தார். சிறைச்சாலையிலே பார்வோனுக்கு நம்பிக்கைக்கு உரிய இரண்டு பேரும் யோசேப்போடே அடைக்கப் பட்டிருந்தனர். சுயம்பாகி (Baker) சமைத்துத் தருபவர். பானபாத்திரக்காரன் - அரசருக்கு குடிப்பதற்கு பானங்களைத் தயார் செய்து விஷம் ஏதும் இல்லை என்று தான் முதலில் அதை குடித்துவிட்டு, பின்பு அரசருக்கு கொடுக்கும் வேலை. இந்த இரண்டு பேரும் கண்ட கனவுக்கு யோசேப்பு அர்த்தம் கூறுவதற்கு முன் தேவனை முன்னிலைப் படுத்துவதைக் கவனியுங்கள்: *சொப்பனத்திற்கு அர்த்தம் சொல்லுதல் தேவனுக்குரியது* (ஆதி 40 : 8). யோசேப்பு அர்த்தம் சொன்னது போலவே நடந்தது. அதேபோல் எகிப்தின் ராஜா பார்வோன் கண்ட இரண்டு சொப்பனத்திற்கு அர்த்தம் சொல்லுவதற்கு முன் தேவனைப் பற்றி என்ன கூறினார்? அப்பொழுது யோசேப்பு பார்வோனுக்கு பிரதியுத்தாரமாக : *''நான் அல்ல, தேவனே பார்வோனுக்கு மங்களமான உத்தரவு அருளிச் செய்வார்,''* என்றான் (ஆதி 41: 16).

அதேபோல் தன்னுடைய சகோதரர்கள் முன்னிலையில் தன்னை யார் என்று வெளிப்படுத்திய போது, சகோதரர்கள் உள்ளம் புண்பட்டு விடக்கூடாது என்பதற்கும் தேவனை முன்னாக வைக்கிறார். *உங்களுக்கு ஜீவரட்சணை செய்யும்படிக்குத் தேவன் என்னை உங்களுக்கு முன்னே அனுப்பினார்,* என்று 3 முறை கூறுகிறார் யோசேப்பு (ஆதி. 45 : 5, 7, 8).

பார்வோன் கண்ட கனவுகளுக்கு விளக்கங்கள் சொன்னதோடு நின்றுவிடாமல், எப்படி நிலைமையை சமாளிப்பது என்பதற்கான ஒரு பெரிய திட்டத்தையும் தேவனுடைய கிருபையால் யோசேப்பு பார்வோனுக்குத் தந்தார். யோசேப்பு ஒரு தேவ மனிதர் என்று அறிந்து கொண்டான், பார்வோன்.

*<u>யோசேப்பு உயர்த்தப்படுதல் :</u>*

யோசேப்பின் கண்ணீரையெல்லாம் ஆனந்த களிப்பாய் மாற்றி பார்வோனின் மூலமாக *எகிப்து தேசம் முழுமைக்கும் அதிகாரியாக ஆக்கினார்.* இந்த செய்தியை கேள்விப்பட்ட போத்திபார் மற்றும் அவன் மனைவி என்ன மனநிலைமையில் இருந்திருப்பார்கள்? எகிப்து தேசத்தாரால் எப்படிப்பட்ட அவமானத்தை அடைந்திருப்பார்கள் என்று யோசிப்போம். உன் பாவம் உன் வாசற்படியில் படுத்திருக்கும். பாவம் தொடர்ந்து பிடிக்கும்.

<u>*2. இல்லாதவர்களுக்கு உதவுதல்*</u>
<u>**(To Help Others)**</u>

*''...உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு பலத்தோடும் உன் முழு சிந்தையோடும்... அன்பு கூறுவாயாக... நீயும் போய் அந்தப்படியே செய் (லூக். 10 : 27, 37).*

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிடம் எத்தனையோ பேர் கேள்வி கேட்டதாக விவிலியத்தில் வாசிக்கிறோம். வேதபாரகர், பரிசேயர், மக்கள், சீஷர்கள் எல்லோருமே கேள்வி கேட்டிருக்கிறார்கள். அதேபோல் பூமியில் வாழ்ந்த நியாய சாஸ்திரி ஒருவன், சர்வ சிருஷ்டிக்கும் நியாயாதிபதியான இயேசுவிடம் ஒரு கேள்வியைக் கேட்கிறான். என்ன அந்தக் கேள்வி?

*''நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்வதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?''* ஆண்டவர் அவனுக்கு தெளிவான ஒரு பதிலைக் கூற விரும்புகிறார். நியாய சாஸ்திரியானவன் நியாயப் பிரமாணத்தை நன்கு படித்திருந்தபடியால் நம் ஆண்டவர் நல்ல சமாரியன் உவமையைக் குறித்து பேசுகிறார். லூக். 10 : 30-வது வசனத்தை நாம் கவனமாக படித்தோமானால் இந்த நிகழ்ச்சி ஒரு கதையல்ல, உண்மை நிகழ்ச்சி என்பது தெரியவரும்.

எருசலேமிலிருந்து எரிகோவிற்கு ஒரு மனிதன் (யூதன்) செல்கிறான். செல்லும் பாதையில் இருந்த மலைகளிலும், காடுகளிலும், திருடர்கள் அநேகர் வழிப்போக்கர்களிடம் கொள்ளையடித்து வாழ்ந்து வந்தனர். ஒருநாள் இந்த யூதனும் செல்கிறான். திருடர்கள் அவனைக் காயப்படுத்தி, அடித்து வைத்திருந்ததையெல்லாம் எடுத்துக் கொண்டு குற்றுயிராக விட்டுவிட்டு ஓடிவிடுகிறார்கள். அந்த வழியாக இரண்டு யூதனும், ஒரு சமாரியனும் வருகிறார்கள்.

a) *ஆசாரியன் :* ஆலயத் திருப்பணியில் மிகவும் உயர்ந்த பொறுப்பான பலியிடுவதற்கென்று தெரிந்து கொள்ளப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்.

b) *லேவியன் :* ஆசாரியர்களுக்கு உதவி செய்வதும், ஆலயத்தை பாதுகாப்பதுமான பணிகளைச் செய்வதும், வேதத்தை கற்றுணர்ந்த-வர்களாக இருந்தனர்.

c) *சமாரியன் :* இஸ்ரவேலரும் புறஜாதி மக்களும் சேர்ந்த கலப்பின மக்களே சமாரியர். இவர்கள் யூதர்களால் தீண்டத்தகாத கீழானவர்களாகக் கருதப்பட்டனர்.

அடிபட்டு கிடக்கும் ஒரு மனிதனை (யூதன்) இரண்டு யூதர்கள் (ஆசாரியன், லேவியன்) பார்த்து விட்டு கண்டும் காணாதவர்கள் போல் போய்விடுகிறார்கள். அவனைக் குறித்த எந்த அக்கறையோ, அன்போ, இரக்கமோ காட்டவில்லை.

யூதர்களை விட புறஜாதி மக்களுக்குத்தான் அன்பு, இரக்கம், விசுவாசம், நன்றி படைத்தல் அதிகமாகக் காணப்படுவதை விவிலியத்தில் காணலாம்.

(மத். 15) விசுவாசத்திற்கு - கானானியப் பெண், (லூக். 8) பெரும்பாடுள்ள ஸ்திரீ.

(லூக். 17) நன்றி படைப்பிற்கு - தொழு நோயிலிருந்து சுகமடைந்த 10 பேரில் சமாரியன் மட்டும் திரும்பி வந்து ஆண்டவருக்கு நன்றி படைத்தான்.

(லூக். 10) இரக்கம் காட்டுதல் - ஆண்டவர் கூறிய நல்ல சமாரியன் உவமை.

(லூக். 7) அன்பு காட்டுதல் - நூற்றுக்கதிபதி தன் வேலைக்காரனுக்காக கிறிஸ்துவைக்காண நேரில் வருதல்.

ஆண்டவரிடமிருந்து அநேக அற்புதங்களையும், சுகத்தையும் பெற்ற நம்மை விட அதே சுகத்தைப் பெற்ற புறஜாதியானுக்குள் கர்த்தர் விரும்பும் எல்லா நற்குணங்களும் ஆழமாக வேரூன்றி நிற்கும் என்பது உண்மை.

எருசலேமிலிருந்து எரிகோவிற்குச் சென்ற யூதன் முதலில் தனியாகச் சென்றது தவறு. அடுத்த படியாக தனியாகச் சென்றவன் பல பேர் சென்று கொண்டிருக்கும் போது அவர்களுடன் சேர்ந்து போயிருக்க வேண்டும்.

### *அடிபட்ட யூதனின் நிலைமை :*

“*காயப்படுத்தி, குற்றுயிராக விட்டுப் போனார்கள்*’’ *லூக். 10 : 30.*

உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் அந்த மனிதனை (யூதன்) நல்ல வசதி மற்றும் ஆலயத்திலே முதன்மை பொறுப்பு வகிக்கும் இரண்டு (யூதர்கள்) பேர் பார்த்துவிட்டு விலகிச் சென்றனர். மூன்றாவதாக வரும் மனிதன் தரையிலே, ரோட்டிலே மயக்கமான நிலையில் படுத்திருக்கும் அந்த மனிதனைப் பார்த்த மாத்திரத்தில் கண்டு மனதுருகி, கிட்டவந்து, தன் வாகனத்தை விட்டு கீழிறங்கி, அவன் காயங்களை எண்ணெயால் கட்டி, அவனை தன் சுய வாகனத்தில் ஏற்றி, சத்திரத்திற்குக் கொண்டு போய் அன்று இரவு முழுவதும் அடிபட்ட யூதனை கவனித்துப் பராமரித்தான்.

### *சத்திரக்காரனிடம் சமாரியன் கூறியது என்ன?*

*...அதிகமாய் ஏதாகிலும் இவனுக்காகச் செலவழித்தால் நான் திரும்பி வரும்போது அதை உனக்குத் தருவேன் என்றான் (லூக். 10 : 35).*

சமாரியனைப் பொறுத்தவரை அடிபட்ட யூதனுக்கு செய்த உதவி மகா பெரியது. அதையும் மீறி அவன் குணமாகும் வரை எவ்வளவு செலவாகுமோ அதையும் தருவதாகக் கூறுகிறான். அந்த சமாரியனுக்கு வைத்த இருதயத்தைத் தான் தேவன் நமக்கும் வைத்திருக்கிறார். ஆனால், நாம் எப்படி இருக்கிறோம்?

### *இயேசு கிறிஸ்து கேட்ட கேள்வி :*

நியாய சாஸ்திரியிடம் ஆண்டவர் கேட்டார் : ஆசாரியன், லேவியன், சமாரியன் இவர்களில் யார் பிறனாயிருந்தான். உனக்கு எப்படித் தோன்றுகிறது? அதற்கு நியாய சாஸ்திரி கூறினான் *அவனுக்கு இரக்கம் செய்தவனே* என்றான். அவனும் ஒரு யூதனாக இருந்தபடியால் அவன் வாயிலிருந்து *சமாரியன்* என்று சொல்லக்கூட இருதயம் இல்லாதவனாயிருந்தான்.

ஆண்டவர் நியாய சாஸ்திரியைப் பார்த்து மட்டும் நீயும் போய் அப்படியே செய் என்று சொல்லவில்லை. அவருடைய சாயலில்

படைக்கப்பட்ட நம் எல்லோரையும் பார்த்துதான் அப்படி சொன்னார், சொல்கிறார். பிறருக்கு நம்மால் முடிந்த உதவிகளைச் செய்வோம்.

***3. தாழ்மையான வாழ்க்கை :*** **(Humbleness)**

a) மேன்மைக்கு முன்னானது தாழ்மை – நீதி 18 : 12.

b) இதோ நான் ஆண்டவருக்கு அடிமை – லூக். 1 : 38.

c) இயேசு கிறிஸ்து சிலுவையின் மரண பரியந்தம் தம்மைத் தாழ்த்தினார் – பிலி. 2 : 8.

முதல் வசனத்தைக் கூறியவர் சாலொமோன் ஞானி. இரண்டாவது வசனத்தைக் கூறியவர் இயேசுவின் தாயாரான மரியாள். மூன்றாவது வசனத்தைக் கூறியவர் அப்போஸ்தலனாகிய பவுல்.

தாழ்மை உள்ளவன் மேன்மையடைவான். நமது உடல், உயிர், அறிவு, குடும்பம், செல்வம், செல்வாக்கு போன்ற யாவுமே கர்த்தரால் கிடைத்தன என்று எண்ணினால் நம்மைத் தாழ்த்துவது / தாழ்மையோடு இருப்பது எளிது. உள்ளத்தில் தாழ்மையாயிருப்பது கர்த்தரால் மேன்மையைக் கொண்டு வரும்.

விவிலியத்திலே எத்தனையோ இராஜாக்கள் தாழ்மையைக் கடைபிடித்து ஆட்சி செய்தார்கள். அவர்களுடைய காலங்களைத் தேவன் ஆசீர்வதித்தார். *தாழ்மை* என்ற சொல்லுக்கு இயேசுவின் தாயாகிய மரியாள் சொன்னது, இதோ நான் ஆண்டவருக்கு *அடிமை*. அடிமை என்ற சொல்லுக்குக் கீழாக தாழ்மை என்ற வார்த்தைக்கு வேறு எந்த ஒரு வார்த்தையும் கிடையாது.

குடும்பம், திருச்சபை, அரசியல், தேர்தல் எல்லாவற்றிலும் பிரச்சனைகள், பிரிவுகள் ஏற்படக் காரணம் தாழ்ந்து போகாததே.

இரண்டு பேர் பலிசெலுத்த காணிக்கைகளைக் கொண்டு வந்தனர். ஆனால் ஒருத்தருடைய காணிக்கைக்கு மட்டும் அங்கீகாரம் கிடைத்தது. இரண்டு பேரும் என்ன உள்ளத்தோடு பலி செலுத்த காணிக்கையைக் கொண்டு வந்தார்கள் என்று தேவன் பார்த்தார்.

பாகாலுடைய தீர்க்கதரிசிகளுக்கும், எலியா தீர்க்கனுக்கும் உண்மையான ஜீவனுள்ள தேவன் யார்? என்பதைக் கண்டறிய கர்மேல் பர்வதத்தில் இரண்டு கூட்டத்தினருக்கும் இடையே ஒரு போராட்டம். ஆகாப் ராஜாவின் மக்கள் தாங்கள் செய்த பலியை ஏற்றுக் கொள்ள பாகால் தெய்வத்தை அழைத்தார்கள். வரவே இல்லை. எலியா தீர்க்கன் என்ன சொல்லி தேவனை அழைத்தான்? நீர் ஜீவனுள்ள தேவன் என்று இந்த ஜனங்கள் முன்னால் வாரும் என்று ஜெபித்தான். எலியாவின் பலிக்கு அக்கினியாக கர்த்தர் இறங்கி ஒரு அங்கீகாரம் தந்தார். எலியா தன்னைத் தாழ்த்தி தேவனை அழைத்தான்.

அதேபோல் ஆலயத்துக்கு இரண்டு பேர் செல்கிறார்கள். இரண்டு பேரும் கர்த்தரிடம் பேசுகிறார்கள். பரிசேயன் தன்னைக் குறித்து மேட்டிமையாக அநேக வார்த்தைகள் பேசுகிறான். தன்னோடு கூட அருகில் நின்றிருக்கும் ஆயக்காரனைப் போல் தான் அல்ல என்று தன்னை உயர்த்தி மற்றொருவனைத் தாழ்த்தி பேசுகிறான். ஆனால், ஆயக்காரன் தன்னுடைய நிலைமையை உணர்ந்து தாழ்த்தி அளவாக தேவனே! *பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்* என்று மூன்றே வார்த்தைகளில் தன் விண்ணப்பத்தை முடித்துக் கொள்ளுகிறான். ஆயக்காரன் நீதிமான் என்று பெயர் பெற்றதோடு மாத்திரமல்லாமல் அவனுடைய விண்ணப்பம் கர்த்தரால் கேட்கப்பட்டது.

தேவனிடமிருந்து ஞானத்தைப் பெற்றுக் கொண்ட சாலொமோன் ராஜாவின் முன்னால் ஒரு சம்பவம் நடந்தது. இரண்டு பெண்கள் உயிரோடிருக்கிற ஒரு குழந்தைக்கு தாங்கள் தான் தாய் என்று கூறி வந்தார்கள். அரசவையிலிருந்த அமைச்சர்கள் எல்லோரும் எவ்வளவோ சொல்லியும் இரண்டு பெண்களும் ஒத்துப்

போவதாகத் தெரியவில்லை. சாலொமோன் ராஜா ஒரு பட்டயத்தைக் கொண்டு வரும்படி கட்டளையிட்டார். உயிரோடிருக்கும் குழந்தையை இரண்டாகப் பிளந்து இரண்டு பெண்களுக்கும் பாதிப் பாதியாக கொடுக்கும்படி ஆணை பிறந்தது. உயிரோடிருக்கும் குழந்தையின் தாய் தன்னை ராஜாவின் முன் முற்றிலுமாகத் தாழ்த்தி குழந்தைக்கு ஒரு தீங்கும் செய்யாமல் மற்றொரு பெண்ணிடம் கொடுத்துவிடுமாறு கூறினாள். உண்மையான தாய் யாரென்று ஞானி அறிந்து, அந்தக் குழந்தையின் உண்மையானத் தாயிடம் ஒப்படைத்தார். தாழ்ந்து போனபடியால் தீர்ப்பு பிரச்சனையில்லாமல் முடிந்தது (1 இராஜா 3 : 16-26).

நிக்கொதேமு ஒரு பரிசேயன். யூதருக்குள்ளே ஒரு அதிகாரி, பரிசேயர், பிரதான ஆசாரியர் குழுவினரோடு உரையாடும் அளவிற்கு மதிக்கப்படத்தக்கவர்; எருசலேமின் போதகர். தனக்கு எல்லாம் தெரியும் என்று எண்ணாமல் தனக்குத் தெரியாததை அவற்றை கூறுபவர்களிடம் தெளிவாக விசாரித்து *கற்றுக் கொள்ளும் தாழ்மை* உள்ளம் கொண்டவர். தங்களது சபையில் பலர் இயேசுவை குற்றவாளி என்று கூறியபோது தனியாக நின்று எதிர்த்தார். இயேசுவைத் தேடி வந்த ஒரே ரபி (போதகர்) இவர் மட்டும் தான். ரகசிய சீடராக இருந்து கிறிஸ்துவின் அடக்கத்தில் தானும் சேர்ந்து அடக்கம் செய்தார். தாழ்மையாக இருந்து மறுபடியும் பிறப்பதைக் குறித்து கிறிஸ்துவை (ரோமர்களுக்குத் தெரியாமல்) இரவில் சந்தித்து தெளிவான பதிலைப் பெற்று தாழ்மையான வாழ்க்கையைக் காத்துக் கொண்டவர் (யோவான் 3 : 1-16).

*"...ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான்..." யோவான் 3 : 3.*

*"Except a man be born again, he cannot see the kingdom of God" (John 3 : 3).*

தேவன் நம்மிடம் அநேக நற்குணங்களை எதிர்பார்க்கிறார். எல்லா நற்குணங்களும் எல்லோரிடமும் அமைவது கிடையாது. ஆனால், சில நற்குணங்கள் எல்லோரிடமும் இருக்க வேண்டும். பழைய ஏற்பாட்டில் தேவன் நம்மிடம் கூறுவதெல்லாம் கீழ்ப்படிதல். அந்த நல்ல குணத்தை மீறினால், அதற்கான தண்டனையை தேவனிடமிருந்து பெற்றே ஆக வேண்டும். கர்த்தருக்கு பயப்படும் பயமானது எதிர்நோக்காத பெரிய ஆசீர்வாதங்களைக் கொண்டு வரும். கர்த்தர் மீது பயம் இருந்தபடியால்தான் வேதாகமத்தை புத்தக வடிவில் பெரிய தீர்க்கன்களால் எழுத முடிந்தது. நம் கையிலும் வேதாகமம் கிடைக்க தேவன் கிருபை செய்திருக்கிறார். வாசித்து, அதற்கேற்றவாறு தேவனுக்கு பயந்து ஜீவிப்போமாக.

உதவி செய்வது என்னும் குணமானது திடீரென்று வராது. பெற்றோரிடமிருந்து தான் பிள்ளைகளுக்கு வரும். உதவி செய்யும் பழக்கத்தை சிறுவயதிலிருந்தே நாம் பழக்குவது நல்லது. இரண்டு அங்கி உள்ளவன் இல்லாதவனுக்கு உதவ வேண்டும். பசியுள்ளவனுக்கு நம்மிடம் உள்ள ஆகாரத்தைப் பகிர்ந்து கொடுப்போம்.

ஆண்டவர் விரும்பும், எதிர்பார்க்கும் நல்ல குணநலன்களில் ஒன்று தாழ்மை. கிறிஸ்துவின் பிறப்பு முதல் உயிர்த்தெழுதல் வரை தாழ்மைதான். தாவீது ராஜாவின் தாழ்மை, கானானியப் பெண்ணின் தாழ்மை, இரண்டு காசு போட்ட விதவையின் தாழ்மை, அப்போஸ்தலனாகிய பவுலுடைய ஊழியப்பாதை முழுவதும் தாழ்மையே. மற்றவர்களுக்கு தாழ்மையை பிரதிபலிக்கும் பிள்ளைகளாகக் காணப்படுவோம்.

மேன்மைக்கு முன்னானது *தாழ்மை*
மேல்படிக்கு முதல்படி *கீழ்ப்படி*
ஏழைக்கு / இல்லாதவனுக்கு
உதவிக் கரம் நீட்டுவோம்.

*"God Bless You"*

*– சகோதரி. பேர்ல் குயிலிராஜா*

# ஆசிரியர் மடல்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர, சகோதரிகளுக்கு, சத்திய வார்த்தை பத்திரிகையின் சார்பாக எங்கள் அன்பின் வாழ்த்துதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

*''...இன்று அவர்கள் கண்களுக்கு முன்பாக உன்னை மேன்மைப்படுத்துவேன்'' (யோசுவா 3:7).*

உலகத்தில் வாழ்கிற நாம் அனைவரும் மேன்மையாக வாழவே பிரியப்படுகிறோம். நம்முடைய வேலை ஸ்தலத்திலும், சொந்த பந்தங்கள் மத்தியிலும், மற்றும் சமுதாயத்திலும் ஒரு மேன்மையான இடத்தில் இருக்க வேண்டும் என்பதே அனைவரது விருப்பமாகும். கர்த்தரால் வரும் மேன்மையே நிலையானதும், சமாதானமுமாய் இருக்கும். அற்பமாய் எண்ணப்பட்டவர்களைக் கர்த்தர் மேன்மைப்படுத்துவார்.

தாவீது தன் குடும்பத்தில் தன் தந்தையால் அற்பமாய் எண்ணப்பட்டான். எப்படியெனில், கர்த்தர் சாமுவேலிடம் ஈசாயின் குடும்பத்தில் ஒருவனை ராஜாவாக தெரிந்து கொண்டேன்; நீ போய் அவனை அபிஷேகம் பண்ணு என்றார். தாவீதின் தகப்பனோ தாவீதை அற்பமாக நினைத்து, தன்னுடைய குமாரரில் தாவீதைத் தவிர, மற்ற ஏழு பேரை மாத்திரமே சாமுவேலுக்கு முன்பாக நிறுத்தினான். ஆனால், கர்த்தர் தாவீதையே தெரிந்து கொண்டு அபிஷேகம் பண்ணினார். அதேபோல அவனுடைய சகோதரரும் அவனை அற்பமாக எண்ணினார்கள். யுத்த களத்தில் பெலிஸ்திய இராணுவத்தைச் சேர்ந்த கோலியாத் இஸ்ரவேலரின் சேனையைத் தொடர்ந்து 40 நாட்கள் நிந்தித்துக் கொண்டிருந்தான். சவுலும், அவனுடைய இராணுவமும் கோலியாத்திற்குப் பயந்து, அவனை எதிர்க்க முற்படவில்லை. சவுலுடைய சேனையில் இருக்கிற தன்னுடைய சகோதரர்களின் சுக செய்தியைப் பார்க்க தாவீது வரும்பொழுது, அங்கு கோலியாத்தின் வார்த்தைகளைக் கேட்டு, ஜீவனுள்ள தேவனுடைய சேனையை நிந்திக்க இந்த பெலிஸ்தியன் எம்மாத்திரம் என்று கோலியாத்தை எதிர்க்க முற்பட்டான். அப்பொழுது அவனுடைய சகோதரன் தாவீதிடம், "வனாந்தரத்தில் உள்ள அந்த கொஞ்ச ஆடுகளை யார் வசமாய் விட்டாய்" என்று தாவீதை அற்பமாய் பேசினான். கோலியாத்தும் தாவீதைப் பார்த்து அவன் இளைஞனும், சவுந்தரிய ரூபமும், சிவந்த மேனியுமாய் இருந்தபடியினால் அவனை அசட்டை பண்ணினான்.

ஆனால் கர்த்தர் இஸ்ரவேல் சேனையும், சவுலும் எதிர்க்க பயப்பட்ட கோலியாத்தைத் தாவீதைக் கொண்டு ஆயுதமில்லாமல் வெறும் கூழாங்கற்களைக் கொண்டு கொன்று போட்டு, சகல இஸ்ரவேல் ஜனங்களுக்கும் முன்பாக தாவீதை மேன்மைப்படுத்தினார்.

நம்முடைய சத்துருக்களுக்கு முன்பாக நம்மை மேன்மைப்படுத்துவார். தன்னை வணங்காத எஸ்தரின் சிறிய தகப்பனான மொர்தெகாயையும், அவனுடைய யூத இனம் முழுவதையும் அழிக்க பிரதான பிரபுவான ஆமோன் சதி செய்து ராஜாவிடமும், அனுமதி பெற்று, அதற்கான நாளையும் குறித்தான். அதற்காக மொர்தெகாயும், எஸ்தரும் அவர்களோடிருந்த யூத ஜனங்களும் மூன்று நாட்கள் உபவாசமிருந்து ஜெபித்தார்கள். சில நாட்களுக்கு முன்பு அகாஸ்வேரு ராஜாவை கொலை செய்ய அவனுடைய பிரதான காவலாளிகள் முற்பட்டபொழுது, அதை மொர்தெகாய் அறிந்து ராஜாவை காப்பாற்றினான். பின்நாட்களில் இதை நடபடி புத்தகத்தில் படித்து ராஜா அறிந்து கொண்டு மொர்தெகாயை கனப்படுத்த விரும்பினான். அதையும் ஆமானைக் கொண்டே சகல ஜனங்களுக்கு முன்பாக ராஜா வஸ்திரம் தரித்து ராஜாவின் குதிரையில் ஏறி, நகர வீதியில் உலாவரச் செய்து, மொர்தெகாயை மேன்மைப்படுத்தினான். ஆமானோவென்றால் சஞ்சலப்பட்டு முக்காடிட்டு தன் வீட்டிற்குப் போனான். எஸ்தர் ராணி, மொர்தெகாய் மற்றும் யூதர்கள்

அனைவரும் கர்த்தருக்கு முன்பாக தங்களைத் தாழ்த்தி, உபவாசித்தபோது, அவர்கள் பகைஞருக்கு முன்பாக ஜெயத்தைக் கொடுத்தார். இதனால் அவர்கள் மகிழ்ச்சியும், சந்தோஷமும், மேன்மையும் அடைந்தார்கள்.

*''...கர்த்தருடைய கட்டளைகளின் படியெல்லாம் செய்ய நீ கவனமாயிருக்கும் படிக்கு, அவர் சத்தத்திற்கு உண்மையாய்ச் செவிகொடுப்பாயானால், உன் தேவனாகிய கர்த்தர் பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் உன்னை மேன்மையாக வைப்பார்'' (உபா. 28:1).*

கடந்த ஆகஸ்ட் மாதம் 3-ஆம் தேதியில் கோவையிலிருந்து சகோதரர்கள் ஜாய்குட்டி, கிதியோன், ராபர்ட், திருப்பூரிலிருந்து சகோ. ராஜகுமார் மற்றும் இருளா (வெள்ளியங்காடு) மொழிபெயர்ப்பாளர் சகோ. சாமுவேல் ஆகியோர் காரமடை சென்று, அங்கிருந்து இருளா மக்கள் வசிக்கும் கிராமங்களில் அம்மக்களுக்கு 144 இருளா (வெள்ளியங்காடு) சங்கீதம், நீதிமொழிகள் புத்தகங்களை விநியோகித்தார்கள். மிகவும் வாஞ்சையுடன் அம்மக்கள் புத்தகங்களை பெற்றுச் சென்றார்கள். வரும் மாதங்களில் மீதமுள்ள புத்தகங்களை விநியோகிக்க குழுவாகச் செல்ல தீர்மானிக்கப்பட்டுள்ளது. இம்மாதம் 16-ஆம் தேதியன்று IBT-யின் 9 முன்னேற்றப் பணியாளர்களும், சில IBT பிரதிநிதிகளும், ஒடிஷாவிலுள்ள பணித்தளங்கள், பாப்பன்பள்ளி சிறுவர் இல்லத்திற்கு பார்வையிடவும், அங்குள்ள IBT சபைகளில் தேவசெய்தியளித்து, அம்மக்களை உற்சாகப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காகவும், IBT ஊழியம் இன்னும் அறிமுகப் படுத்தப்படாத இடங்களில் (சபைகளில்) IBT ஊழியம் அறிமுகப்படுத்தப்பட அந்தந்த சபை ஆயர்களை, பிரதிநிதிகள், முன்னேற்றப் பணியாளர்களை அணுகி சந்தர்ப்பம் பெற்று, தேவ செய்தியளித்து, ஊழிய அறிமுகம் செய்யப்பட்டு, IBT மூலமாக வெளியிடப்பட்டுள்ள ஆவிக்குறிய இலக்கியப் புத்தகங்களை இதுவரை பயன்படுத்தாதவர்கள் வாங்கிப் பயன் பெறவும், ஊழியம் விரிவாக்கப்படவும், தேவநாமம் மகிமைப்படவும் ஜெபியுங்கள்.

“இயேசு கிறிஸ்துவின் கிருபை எப்போதும் உங்கள் அனைவரோடும் இருக்க ஜெபிக்கிறோம்.

“ஷாலோம்!”

கர்த்தரின் பணியில்
*உங்கள் சகோதரன்*
*K. ஜெய்சிங்*

# குவி மொழி

*நாட்டிய நாடகம் :* குவி மக்கள் 250 பாடல்களைக் கொண்ட பாடல் புத்தகங்களை வைத்துள்ளதோடு, சொந்த மொழியில் நற்செய்தி திரைப்படங்களையும் தயாரித்துள்ளனர். மேலும் நற்செய்தியைப் பரப்ப அவர்கள் பயன்படுத்தும் மற்றொரு முறைதான் நாட்டிய நாடகம். குரு ஒருவர் கதை ஒன்றைப் பாடலாகப் பாட, குழுவில் உள்ள மற்றவர்கள் அக்கதையின் கதாபாத்திரங்களாக மாறி, அவர் பாடுவதற்கேற்ப அவர்களுடைய கலாச்சாரத்தின்படி ஆடுவார்கள். சில சமயங்களில் இந்த நாடகம் இரவு முழுவதும் கூட நடைபெறும். இதைக் காண்பதற்காக மக்கள் ஒரு கிராமத்திலிருந்து மறுகிராமம் வரைக்கும் பிரயாணம் பண்ணுவார்கள். வேதாகமக் கதைகளை மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்கு இது ஒரு சிறந்த வழி என்று நாங்கள் விசுவாசித்தோம். இந்த நாடகக் கலைஞர் ஒருவர் ஆண்டவரை ஏற்றுக்கொண்டபோது, நாடக முறையில் வேதாகமத்தின் பதிவுகளை நடிப்பதற்கு அவரிடம் கேட்டுக்கொண்டோம். இந்த நிகழ்ச்சி தற்போது கிறிஸ்துமஸ் நாட்களில் பயன்படுத்தப்படுகிறது. குவி திருச்சபை Sata Jiru (மெய்வழி) என்ற யூடியூப் சேனலையும் நடத்தி வருகிறது. Dukku Dayu Sukku (துக்கத்திற்குப் பின் மகிழ்ச்சி-யோசேப்பு கதை) என்ற நாட்டிய நாடகம் 76000 பேரால் பார்க்கப்பட்டுள்ளது. இந்த ஊடகங்கள் பல்லாயிரக்கணக்கான குவி மக்கள் தங்கள் சொந்த மொழியில் நற்செய்தியைக் கேட்பதற்கு உதவியாக உள்ளன. தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

நன்றி - “அருட்பணி” ஜூலை 2024

# கதபா மொழி

கதபா கிராமத்து வழக்கங்களை எளிதில் கற்றுக் கொண்டாலும், கதபா மொழியைக் கற்றுக் கொள்வது சிரமமானது. இது வித்தியாசமான மொழி. குரல் ஒலி முறையைப் (Phonetics) பின்பற்றி, கதபா மொழியில் உள்ள பதங்களையும், வார்த்தைகளையும் சிரத்தையெடுத்து எழுதி ஒவ்வொரு இரவிலும் எழுதப்பட்ட வாக்கியங்களையும், வார்த்தைகளையும் கற்றுக் கொள்ள வேண்டும். சீக்கிரத்தில் அதற்குப் பழக்கப்பட்டும் தேவைப்பட்ட நேரங்களில் அம்மக்களின் உதவியோடும் கதபா மொழியைக் கற்றுக் கொண்டு அவர்களது சொந்த மொழியில் நற்செய்தியை அறிவிக்க முடியும்.

நன்றி – "அருட்பணி" ஜூலை 2024

# சமாதானம்

★ *கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரசன்னமாக்கி, உனக்குச்* ***சமாதானம்*** *கட்டளையிடக்கடவர். (எண்ணாகமம் 6 : 26)*

★ *நீ ஒரு பட்டணத்தின் மேல் யுத்தம் பண்ண நெருங்கும்போது, அந்தப் பட்டணத்தாருக்குச்* ***சமாதானம்*** *கூறக்கடவாய். (உபாகமம் 20 : 10)*

★ *தம்முடைய ஜனங்களுக்கும் தம்முடைய பரிசுத்தவான்களுக்கும்* ***சமாதானம்*** *கூறுவார்; அவர்களோ மதிகேட்டுக்குத் திரும்பாதிருப்பார்கள். (சங்கீதம் 85 : 8)*

★ *சிநேகிக்க ஒரு காலமுண்டு, பகைக்க ஒரு காலமுண்டு, யுத்தம்பண்ண ஒரு காலமுண்டு,* ***சமாதானம்பண்ண*** *ஒரு காலமுண்டு. (பிரசங்கி 3 : 8)*

★ *... உன்* ***சமாதானம்*** *நதியைப்போலும், உன் நீதி சமுத்திரத்தின் அலைகளைப்போலும் இருக்கும். (ஏசாயா 48 : 18)*

★ ***சமாதானம்*** *பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள். (மத்தேயு 5 : 9)*

★ *அந்த வீடு பாத்திரமாயிருந்தால், நீங்கள் கூறின* ***சமாதானம்*** *அவர்கள்மேல் வரக்கடவது; அபாத்திரமாயிருந்தால் நீங்கள் கூறின* ***சமாதானம்*** *உங்களிடத்திற்குத் திரும்பக் கடவது. (மத்தேயு 10 : 13)*

★ *ஒரு வீட்டில் பிரவேசிக்கிறபோது: இந்த வீட்டுக்குச்* ***சமாதானம்*** *உண்டாவதாகவென்று முதலாவது சொல்லுங்கள். (லூக்கா 10 : 5)*

★ *ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம்,* ***சமாதானம்,*** *நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம். (கலாத்தியர் 5 : 22)*

★ *...* ***தேவசமாதானம்*** *உங்கள் இருதயங்களையும், உங்கள் சிந்தைகளையும், கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும். (பிலிப்பியர் 4 : 7)*

தொகுப்பு : **Miss . Y. *நதியா***

# பணித்தளச் செய்திகள்

*மிஷனெரி : சகோ. இஸ்ரேல் எட்லா*
*பணித்தளம் : சந்தோஷ்பூர் (ஒடிஷா)*

கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக!

கடந்த மாதம் மிஷனெரிப் பணிக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள 15 கிராமங்களுக்குச் சென்று பலரைச் சந்தித்து, நற்செய்தியைப் பகிர்ந்து கொண்டு, அவர்களுக்காக ஜெபித்தேன். கிராமங்களின் பெயர்கள் : போடோமசிகான், நெங்கநால், பக்திகுடா, பண்டாரிகுடா, மிர்மின்டா, சியூனி, பாடாஅம்தா, ஜார்செம்லா, சந்தோஷ்ப்பூர், கர்லிமால், தோரிகுடா, ரஜோடா, குட்னியாகுடா, ஜெபகுடா, பக்னகுடா, தலைகுடா, வான்டியா, ரஜர்காட் ஆகிய கிராமங்கள். சகோ. கிருஷ்ணா, ராஜ்பால், சங்கர், துல்ராம, மது, லோகி, சகோதரிகள். சோனாலி, மனீஷா, மீனா, சன்மதி ஆகியோர் மிக வாஞ்சையுடன் செய்தியைக் கேட்டார்கள்.

மேலும் ஞாயிறு ஆராதனை, உபவாச ஜெபக்கூட்டங்கள் சந்தோஷ்ப்பூர் மற்றும் நெங்கநால் ஆகிய இரு பணித்தளங்களில் நடத்தப்பட்டன.

ஜெபங்களில் IBT மொழிபெயர்ப்புப் பணிகள், மிஷனெரிப் பணிகள், சிறுவர் இல்லப் பணிகள், முன்னேற்றப் பணிகள், IBT நிர்வாகிகள், தாங்குனர்கள், எல்லோருக்காகவும் ஜெபம் ஏறெடுக்கப்பட்டன. மேலும் IBT ஊழியத்தின் தேவைகள் அதிகமாவதால் புதிய தாங்குநர்கள் கிடைக்கவும், ஊழியம் தடைபடாமல் நடக்கவும், ஊழியம் விரிவாக்கப்படவும் என் மிஷனெரிப் பணி மற்றும் என் குடும்பத்தினருக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

----------•----------

*மொழிபெயர்ப்பு உதவி /*
*முன்னேற்றப் பணியாளர் :*
*சகோதரி. எலிசபெத்*
*மொழி : பனியா*
*பணித்தளம் : கூடலூர் (தமிழ்நாடு)*

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்!

கடந்த மாதத்தில் எங்கள் பணியை ஸ்தோத்திரத்துடனும், ஜெபத்துடனும் ஆரம்பித்தோம். கடந்த ஆகஸ்ட் மாதம் அலுவலகத்திலிருந்து கூறப்பட்டபடி, IBT தாங்குனர்களுக்கு அனுப்பும்படியாக, எங்கள் பணியின் வீடியோ தயார் செய்து அனுப்பினோம்.

முன்னேற்றப் பணி மற்றும் மிஷனெரிப் பணிக்காக மவுண்ட் பிளசண்ட், ஜெய்பாரத் காலனி ரோடு, நடு கூடலூர், பிள்ளையார் கோவில் தெரு, முதல் மைல் தெரு, தேவாலா, பந்தலூர், மரப்பாலம், ராஜகோபாலபுரம், தாஜ் மருத்துவமனை ஆகிய இடங்களுக்குச் சென்று, IBT பங்காளர்களைச் சந்தித்து, காணிக்கைப் பெற்று, அவர்களுக்காக ஜெபித்து வந்தோம். IBT ஜெபக்கூடுகையை புத்தூர்வயல் பகுதி ஹெல்த் கேம்ப் பகுதிகளில் நடத்தினோம்.

எங்கள் ஊழியப்பணிக்காகவும், எங்கள் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

----------•----------

*முன்னேற்றப் பணியாளர் :*
*சகோ. பால் ஜெயசுதன்*
*பணித்தளம் : திருச்சி*

கர்த்தரின் கிருபையினால் கடந்த மாதம் முழுவதும் முன்னேற்றப் பணியை திருச்சி பகுதியில் செய்ய கர்த்தர் கிருபை செய்தார். கடந்த மாதம் அநேக நாட்கள் மழை பெய்தது. ஒரு சில பகுதியில் வாகனத்தில் செல்வது சற்று கடினமாக இருந்தது. ஆனாலும் கர்த்தர் தம்முடைய கிருபையினால் தாங்கினார். திரு. பீட்டர் தர்மராஜ் அவர்கள் மனைவி மற்றும் திரு. மில்டன் சாலொமோன் அவர்கள் கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்கள். இவர்கள் குடும்பத்தைச் சந்தித்து ஆறுதல் கூறி ஜெபித்தேன். திரு. செல்வராஜ் அவர்கள் தொடர்ந்து பெலவீனமாக இருந்து வருகிறார்கள். அவர்களுக்காக பாரத்தோடு ஜெபித்தேன்.

திரு. ஜோசப் அவர்களை சந்தித்து புதிய சபையில் முன்னேற்றக் கூட்டம் நடத்த கேட்டேன். திரு. சந்திரசேகரன் அவர்களைச் சந்தித்து C.S.I. All Souls Church-ல் முன்னேற்றக் கூட்டம் நடத்தக் கேட்டேன். துவாக்குடி மலையில் வசிக்கும் திரு. ஜோசப் அவர்களை சந்தித்து C.S.I. Immanuel

Church-ல் முன்னேற்றக் கூட்டம் நடத்த கேட்டேன். ஒவ்வொரு IBT-ன் தாங்குனர்களையும் சந்தித்து, ஊக்கமாக ஜெபித்து, காணிக்கை பெற்று வருகிறேன். 200 மொழி திட்டத்தைச் சொல்லி அதற்காக ஜெபிக்க கேட்டு வருகிறேன். IBT ஊழியத்தின் விரிவாக்கத்திற்கான ஜெபத்தை செய்து வருகிறேன். எனக்காகவும், என் குடும்பத்திற்கும் ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

----------•----------

*மொழிபெயர்ப்பாளர் :*
*சகோ. அசரியா மாதுரி*
*மொழி : கோயா*
*பணித்தளம் : பொடியா (ஒடிஷா)*

கர்த்தருக்கே துதி உண்டாவதாக!

கடந்த மாதம் மொழிபெயர்ப்புப் பணியில் பழைய ஏற்பாட்டு பாகத்தில் 1 தீமோத்தேயு அதி. 2 : 6 முதல் அதி. 6 : 21 ஆம் வசனம் வரையிலும், 2 தீமோ. அதி. 1 : 1 முதல் 4 : 22 வரையிலும், தீத்து அதி. 1 : 1 முதல் அதி. 3 : 15 வரையிலும், எபிரேயர் அதி. 1 : 1 முதல் அதி. 13 : 1-25 வரையிலும், யாக்கோபு அதி. 1 : 1 முதல் அதி. 5 : 20 வரையிலும் கணினியில் கீ-இன் செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஜூலை மாதம் ஏறக்குறைய 15 நாட்கள் மிக அதிக அளவில் மழை பெய்தது. இதனால் பாலங்களுக்கு மேலாக மழை நீர் சென்று போக்குவரத்து பெரிதும் ஸ்தம்பித்தது. எங்கள் மாவட்டத்தில் அனைவரும் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள்.

IBT-இன் முன்னாள் மிஷனெரியின் தாயார் மழை நேரத்தில் மரணமடைந்தார்கள். பெரிய சிரமத்துடன் அடக்கம் செய்யப்பட்டது. ஒரு கிறிஸ்தவ விசுவாசி சகோ. பாண்டிமுனா என்பவர் கிட்னி பிரச்சனையினால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். அவர் பூரண சுகத்திற்காகவும், என் மொழிபெயர்ப்புப் பணி மற்றும் என் மகன் தாரா பாபு கல்லூரியில் சேர்ந்துள்ளான். ஹாஸ்டலில் இடம் கிடைக்கவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

## அடிக்கடி நினைவில் கொள்ளக்கூடிய வசனங்களில் ஒரு சில முக்கிய வசனங்கள்

★ *நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப் பலத்தோடும் அன்பு கூருவாயாக. (உபாகமம் 6 : 5)*

★ *தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். (யோவான் 3 : 16)*

★ *பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்; என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள். (யோவான் 15 : 9)*

★ *இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது. (1 கொரிந்தியர் 13 : 13)*

★ *நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களை துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். (மத்தேயு 5 : 44)*

★ *நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். (ஏசாயா 53 : 5)*

★ *உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் விழித்திருங்கள். (மத்தேயு 24 : 42)*

★ *நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். (ரோமர் 5 : 8)*

★ *இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது. (வெளிப்படுத்தின விசேஷம் 22 : 12)*

*தொகுப்பு : N. ஜார்ஜ் வில்லியம்*

# படுகா வேதாகமம் விநியோகம்

*IBT*-இன் ஊட்டி, கோத்தகிரி பகுதிகளில் முன்னேற்றப் பணியாளராகப் பணியாற்றி வரும் சகோ. ராமலிங்கம் அவர்கள் படுகா வேதாகமத்தை அவருக்கே உரிய உற்சாகத்தில் பலரைச் சந்தித்து, விநியோகித்துள்ளார். *BSI*-இல் ஒரு வேதாகமம் அச்சிடுவதற்காகும் செலவு ரூ. 600. ஆனாலும் படுகா மக்களில் வசதி குறைந்தவர்களும் இதனைப் பெற்று பயன் பெறும்படியாக ஒரு வேதாகமத்திற்கு ரூ. 100 என்ற தொகையே நிர்ணயிக்கப்பட்டது. விருப்பமுள்ளவர்கள் அதிகத் தொகை காணிக்கை கொடுத்து வாங்கியுள்ளார்கள்.

சகோ. ராமலிங்கம் அவரின் விநியோகம் குறித்து சாட்சியாய் எழுதியது : கடந்த ஜூன் மாதத்தில் மட்டும் 30 படுகா வேதாகமம் அம்மொழி பேசும் மக்களுக்குக் கொடுக்கப்பட்டன. இதில் 17 பைபிளுக்கு ரூ. 100 வீதம் கொடுத்தார்கள். மீதம் 13 வேதாகமங்களுக்கு ரூ. 16,750 நன்கொடையாகக் கொடுத்தார்கள். தங்கள் மொழியில் முழு வேதாகமத்தைக் கண்ட மக்கள் அதிக வாஞ்சையுடன் வாங்கிச் சென்றார்கள்.

இது தவிர அனந்தகிரியிலுள்ள YWCA ஹோட்டலின் மேனேஜர் திரு. பாட்ரிக் டைட்டஸ் மற்றும் அவருடைய தகப்பனார் திரு. விக்டர் தாமஸ் ஆகிய இருவரும் சேர்ந்து (ரூ. 3000 & ரூ. 2000) ரூ. 5000 தொகையை மிஷனெரி குழந்தைகளின் கல்வி நிதிக்காக கொடுத்தார்கள். உதகையில் சாலொமோன் கிங்ஸ்டார் என்பவரைச் சந்தித்து படுகா வேதாகமத்தைக் காட்டினோம். அவர் எங்களைப் பார்த்து, இந்த வயதில் இப்படி உண்மையாக ஊழியத்தை பாரத்தோடு செய்கிறீர்களே என்று புகழ்ந்து கூறி, ஒரு வேதாகமத்திற்கு ரூ. 1000 காணிக்கையாகக் கொடுத்து, இனிமேல் ஒவ்வொரு மாதமும் என்னைச் சந்தித்து, *IBT* ஊழியத்திற்கு காணிக்கைப் பெற்றுச் செல்லுங்கள் என்று கூறினார்.

கோத்தகிரியில் பிரபாகரன் என்பவர் 2 வேதாகமங்கள் வாங்கி ஒன்று தன் தாயாருக்குக் கொடுத்து, நாம் இனி இந்த வேதாகமத்தைத்தான் பயன்படுத்த வேண்டும் என்று தன் அம்மாவிடம் கூறினார். அதிகமானவர்கள் தங்களுக்கும் படுகா வேதாகமம் வேண்டுமென கேட்டிருக்கிறார்கள். அடுத்து அச்சிடப்பட்டு வந்த பிறகே கொடுக்க முடியும்.

*கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக!*

**– J. ராமலிங்கம்**

# உலகச் செய்திகள்

★ திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி அருகே உள்ள புதுப்பாலம் பகுதியைச் சேர்ந்த தூய்மைப் பணியாளரின் மகள் துர்கா என்பவர் அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் குரூப் 2 போட்டித் தேர்வில் தேர்ச்சி பெற்று நகராட்சி ஆணையராகும் பணி நியமன உத்தரவை தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் பெற்றுக்கொண்டார்.

★ பீகார் மாநிலம் ஜெஹனாபாத் மாவட்டத்தில் உள்ள பாபா சித்தேஸ்வர்நாத் கோயிலில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 6 பெண்கள் உள்பட 7 பேர் உயிரிழந்தனர், 16 பேர் காயமடைந்தனர்.

★ மத்திய கல்வி அமைச்சகம் வெளியிட்டுள்ள தேசிய அளவிலான சிறந்த உயர் கல்வி நிறுவனங்களுக்கான தரவரிசையில் சென்னை ஐ.ஐ.டி. முதலிடம் பெற்றுள்ளது.

★ 33–வது கோடைகால ஒலிம்பிக் போட்டி பாரீஸ் நகரில் இவ்வருடம் ஜூலை 26–ஆம் தேதி தொடங்கி, ஆகஸ்ட் 11–ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவில் நிறைவடைந்தது.

★ தாய்லாந்தின் புதிய பிரதமராக முன்னாள் பிரதமர் தக்சின் ஷினவத்ராவின் மகள் "பேடொங்டான் ஷீனவத்ரா" நாடாளுமன்றத்தால் வெள்ளிக்கிழமை தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## இந்திய வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள் இயக்கத்துடன் சந்திப்பு (IBT with FMPB)

இந்திய வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள் இயக்கத்தின் தலைவர்களுக்கு சென்னையில் நமது அலுவலகத்தில் வைத்து புரிந்துணர்வு ஒப்பந்த (*MOU*) முன்வரைவை தயாரிப்பதைக் குறித்து பேசினோம். இதன் மூலமாக இவ்விரு இயக்கங்களின் வேதாகம மொழிபெயர்ப்புப் பணிகள் பெலப்படுமென்று விசுவாசிக்கிறோம்.

*நன்றி - ''அறைகூவல்'' ஆகஸ்ட் 2024*

# தேவை

***IBT** மொழிபெயர்ப்பாளர்களுக்கு கொடுப்பதற்கு **3 Laptop**-கள் தேவைப்படுகின்றன. இதற்கான தொகை ரூ. 1,35,000/- ஆகும். இதற்கு **Sponsor** கிடைப்பதற்காக ஜெபியுங்கள்.*

*- **IBT** பொருளாளர்*

Indian Bible Translators ஊழியங்களை காணிக்கைகளால் தாங்க விரும்புவோர் கீழே குறிப்பிட்டுள்ள வங்கிகளின் மூலமாகவும், கீழேயுள்ள **QR Code-ஐ Scan** *செய்து கைபேசி மூலமாகவும்* உங்கள் காணிக்கையை எங்களுக்கு அனுப்பலாம்.

**1. STATE BANK OF INDIA**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 30008395600 |
| Name | : | Indian Bible Translators |
| Branch Code | : | 7231 |
| Branch | : | Peelamedu |
| IFS Code | : | SBIN0007231 |

**2. INDIAN BANK**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 475742259 |
| Name | : | Indian Bible Translators |
| Branch Code | : | S107 |
| Branch | : | Peelamedu |
| IFS Code | : | IDIB000S107 |

**SCAN & PAY**

Merchant Name : Indian Bible Translators

UPI ID : INDIANBIBLE@SBI

BHIM | UPI

(அனுப்பப்பட்ட விபரத்தை IBT அலுவலகத்திற்கு உடனடியாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். செல் : 90470 57414 இது உங்களுக்கு ஒப்புதல் ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்)

## கீழே கொடுக்கப்பட்டுள்ள புத்தகங்கள் விற்பனைக்கு உண்டு. வாசித்துப் பயனடையுங்கள்..!

| | | |
|---|---|---|
| 1. | வானத்தின் வாசல் | ரூ. 70/- |
| 2. | வானத்தின் மன்னா | ரூ. 70/- |
| 3. | சோர்வும் தீர்வும் | ரூ. 60/- |
| 4. | பயப்படாதிருங்கள் | ரூ. 70/- |
| 5. | வேதாகமப் புத்தகங்களுக்கு ஓர் அறிமுகம் | ரூ. 60/- |
| 6. | உயிருள்ள உதாரணங்கள் | ரூ. 60/- |
| 7. | பாருக்குள் பரலோகம் | ரூ. 100/- |
| 8. | விவிலியப் பயணத்தின் விடிவெள்ளி | ரூ. 100/- |
| 9. | தேவ சத்தம் | ரூ. 100/- |
| 10. | Word of Life (ஆங்கிலம்) | ரூ. 100/- |
| 11. | Word of Life (மலையாளம்) | ரூ. 100/- |
| 12. | Introduction to the Books of the Bible | ரூ. 70/- |
| 13. | Defeat the Despair (ஆங்கிலம்) | ரூ. 100/- |
| 14. | Seeds for the Good Soil (ஆங்கிலம்) | ரூ. 120/- |
| 15. | சத்திய வார்த்தையின் முத்துக்கள் | ரூ. 120/- |

IBT வெளியிட்டுள்ள புத்தகங்களை தபால் மூலம் பெற விரும்புவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள் – செல் : 90470 57414. நேரிடையாக, எங்கள் முன்னேற்றப் பணியாளர்கள் மற்றும் பிரதிநிதிகள் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகங்கள் ஆவிக்குரிய வாழ்விற்கும், சமுதாய வாழ்வின் வெற்றிக்கும் மிகவும் பயனளிக்கக் கூடிய வகையில் Rev. Prof. S. பன்னீர் செல்வம் அவர்களால் எழுதப்பட்டவைகளாகும். ஆகவே, வாங்கிப் படித்துப் பயன்பெறுங்கள்!

# ஜெபியுங்கள்! துதியுங்கள்!!

1. திட்டமிட்டபடியே கடந்த 7.8.2024 அன்று லம்பானி மொழிபெயர்ப்பாளர்கள் சகோ. பரமேஷ் மற்றும் சகோ. ஹனுமந்த் இருவரும் கோவை IBT மையத்திற்கு வந்து, புதிய ஏற்பாடு இறுதி சரிபார்ப்புப் பணியை மேற்கொண்டு, அதை முடித்ததற்காக கர்த்தரைத் துதியுங்கள். பேஜ் செட்டிங் பணி ஆரம்பிக்கப்படவும், துரிதமாக மொழி பெயர்ப்பாளருக்கு கொடுக்கப்படவும் ஜெபியுங்கள்.

2. IBT தாங்குநர்கள், பத்திரிகை வாசகர்களின் ஜெபத்தினாலும், உதவியினாலும், மொழி பெயர்ப்பாளர்களின் உழைப்பினாலும், BSI ஆலோசகர்களின் உதவியினாலும் பல மொழிகளில் வேதாகமங்கள், புதிய ஏற்பாடு, சங்கீதம் நீதிமொழிகள், நற்செய்திப் புத்தகங்கள், சில மொழிகளில் ஒலிப்பதிவு செய்யப்பட்ட கருவிகளும் வெளியிடக் கர்த்தர் கிருபை புரிந்ததற்காக துதியுங்கள். அடுத்த IBT லோகோஸ் முகாமிற்குள்ளாக முண்டாரி, சம்பல்புரி, போவி, போஜ்புரி, கலகாண்டியா மற்றும் மிர்கான் மொழிகளிலுள்ள பழைய ஏற்பாடு பணிகளும், சித்திக், வாக்ரி, டிங்கால், குடுக், கடபா, சோரா, கோண்டா பொர்ஜா, குவி, பாகேலி, பண்டேலி ஆகிய 10 மொழிகளில் புதிய எற்பாடு பணிகளும் நிறைவு செய்யப்பட மொழிபெயர்ப்பாளர்கள், உற்சாகத்தோடு இப்பணியில் ஈடுபட ஜெபியுங்கள்.

3. மதுரை - இராமநாதபுரம் திருமண்டலத்திலுள்ள CSI சபை ஆலயங்களில் IBT-இன் முன்னேற்றக் கூட்டங்கள் நடத்த அனுமதி கேட்கப்பட்டு, முயற்சி நடந்து வருகிறது. இதுவரை IBT ஊழியம் அறிமுகப்படுத்தப்படாத சபைகளில் சந்தர்ப்பம் கிடைக்க கர்த்தர் வழிவாசல்களைத் திறக்க ஜெபியுங்கள்.

4. இம்மாதம் திட்டமிடப்பட்டுள்ள பணித்தளப் பார்வைக்கு செல்லும் முன்னேற்றப் பணியாளர்கள், சில பிரதிநிதிகளின் பாதுகாப்பான வழிப்பயணத்திற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.


Send all your Contributions :
**Cheques / DD / M.O. to**
**INDIAN BIBLE TRANSLATORS**
Civil Aerodrome Road, Coimbatore - 641 014.
Phone : 0422 - 4520143
WhatsApp & Mobile : 90470 57414
E-mail : indianbibletranslators@gmail.com
**Web : www.ibtword.com**


## சத்திய வார்த்தை

'சத்திய வார்த்தை' பத்திரிகைக்கு உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம். வருட சந்தா ரூபாய். 100/-

*சந்தா அனுப்ப வேண்டிய முகவரி :*

**WORD PUBLISHERS TRUST**
Civil Aerodrome Road, Coimbatore - 641 014.


Editor & Published by On behalf of — **Mr. K. JAISINGH**
**WORD PUBLISHERS TRUST**
14, Ashok Layout,
Civil Aerodrome Road,
Coimbatore - 641 014.

Printed by — **Mr. C.K. VENKATESH**
Chandra Prabha Press
113-118, V.H. Road, CBE-1.


## வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு

சத்திய வார்த்தை பத்திரிகையின் சந்தாவை புதுப்பிக்காதிருந்தால் ரூ. 100/-ஐ மணியார்டர் மூலமாகவோ அல்லது கீழே குறிப்பிட்டுள்ள வங்கிக் கணக்கிற்கு அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். வங்கியில் அனுப்பினால் IBT அலுவலகத்திற்குத் தொடர்பு கொண்டு தெரியப்படுத்தவும்.

**தொடர்பு எண். 90470 57414.**

BANK DETAILS
**CENTRAL BANK OF INDIA**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 1630413107 |
| Name | : | Word Publishers Trust |
| Branch | : | Kalapatti |
| IFS Code | : | CBIN0282057 |

Address :
**WORD PUBLISHERS TRUST**
14, Ashok Layout,
Civil Aerodrome Road,
Coimbatore - 641 014.


**SATHTHIYA VAARTHAI - TAMIL**
Date of Publishing : 2nd & 3rd October 2024
Postal Regd. No. **CB/052/2024-26**
Licensed to Post without Prepayment No.
**TN/WR/CB/164/WPP/2024-2026 (Tamil)**
**RNI No. 82166**